**தவலம பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 திசெம்பர் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 நவம்பர் 17 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து, தவலம பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) நிலையான சொத்துகள் கணக்கின் மீதி மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகை கணக்கின் மீதிகள் இடையே ரூபா 765,692 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கில் ரூபா 1,236,151 தொகைக்கான பற்றாக்குறை திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் அதே தொகையால் உரிமை மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(இ) நிலுவை கடை வாடகை கணக்கின் மீதி ரூபா 24,525 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான கடன் கொடுத்தோர் மீதி ரூபா 62,000 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள கூட்டுத் தொகை ரூபா 47,261,648 தொகைக்கான 07 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடு/ அட்டவணைகளில் காணப்படும் மீதிகளிடையே ரூபா 11,694,802 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன.

#### 1.3.3 தொங்கல் கணக்கு

4 வருடங்களை விட மிகையான காலம் முதல் முன் கொண்டு வந்து காணப்படும் ரூபா 11,493 தொகைக்கான தொங்கல் கணக்கின் செலவு மீதியை இனங்கண்டு உரிய சீராக்கல் மேற்கொள்ளப்பட்டு, கணக்குகளை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

-------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2005 ஆண்டு முதல் முன் கொண்டு வந்து காணப்படும் ரூபா 518,000 தொகைக்கான பெற வேண்டிய வர்த்தக கட்டிடத் தொகுதியின் வைப்பு மீதி மற்றும் 2013 ஆணடு முதல் காணப்படும் ரூபா 8,800 தொகைக்கான நிலுவை வர்த்தக அனுமதிப்பத்திர கட்டண மீதியை தீர்த்து கொள்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2011 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நிர்மாண வேலைகள் தொடர்பாக பெற வேண்டிய கூட்டுத் தொகை ரூபா 10,031,216 இற்கான தொகையின் அறவீடு செயவதற்காக மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 21 நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டியிருந்த கூட்டுத் தொகை ரூபா 12,454,024 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 06 வருடங்களை விட மிகையான காலம் முதல் நிதிக் கூற்றுக்களில் முன் கொண்டு வந்து காணப்படும் ரூபா 1,918,452 தொகைக்கான செலுத்த வேண்டிய ஒய்வூதிய மீதியை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

------------------------------------------------------------

நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 29,271,598 தொகைக்கான 8 நிலையான சொத்து விடயங்கள் தொடர்பாக பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடும், ரூபா 2,666,209 தெகைக்கான முத்திரைக் கட்டணம் மற்றும் நீதி மன்ற தண்டப்பணம் தொடர்பாக முறையாக பேணப்பட்ட முத்திரை கட்டண மற்றும் நீதிமன்றத் தண்டபண பதிவேடும் ரூபா 5,253,480 தொகைக்காக கடன் கொடுத்தோர் மீதியினை விரிவான தகவல்கள் , விளக்கங்கள், உறுதிப்படுத்தல்களும் சமர்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாகப் பரிசோதனை மேற் கொள்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

-----------------------------------------------------------------------------------------------------------------------------.

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை குடியரசு நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணங்கள் 570 மற்றும் 571(1)(2) | காலத்தை மிகைத்து கூட்டுத்தொகை ரூபா 141,000 தொகைக்கான 08 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணங்கள் 1645 மற்றும் 1646 | சபையின் 08 வாகனங்களுக்கான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுகளின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விட குறைந்த வருமானம் ரூபா 1,126,312 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விட குறைந்த வருமானம் ரூபா 3,990,442 தொகையாக காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 2,864,130 இற்கான வளர்ச்சி ஒன்றினைக் காட்டியது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 ஏக்கர் வரி

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 49,808 தொகையாக காணப்பட்ட நிலுவை ஏக்கர் வரி மீதி வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 55,469 தொகை வரை அதிகரித்திருந்தது. நிலுவை வரியை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1) (அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

#### 2.2.2 வர்த்தக வரி

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வர்த்தக வரி மீதி ஆகிய ரூபா 413,960 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேசசபைச் சட்டத்தின் பிரிவு 152(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.2.3 கடை வாடகை

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 41,550 தொகைக்கான நிலுவை கடை வாடகை மீதி மற்றும் வர்த்தக கடைத் தொகுதி மிகைக் கட்டணம் என்பவற்றை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.3.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,971,585 இற்கான முத்திரைக் கட்டணம் மற்றும் ரூபா 694,625 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் என்பன கிடைக்க வேண்டியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 நிறுவனத்திற்கு சொந்தமான பாவனைக்கு உதவாத வாகனங்களை அகற்றுவது தொடர்பான 2015 ஜுலை 10 ஆம் திகதி 2/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல், சபைக்கு சொந்தமான இரும்பு உறுளை (பாதை தகர்க்கும் இயந்திரம்) 2010 ஆண்டு முதல் செயற்படாமல் காணப்பட்டது.

**3.2 செயலாற்றுகை**

சபையினால் பேணப்பட்டு வரும் ஆயுர் வேத நிலையத்திற்கான மருந்து வகைகள் கொள்வனவு செய்வதற்காக கடந்த 04 ஆண்டுகளின் போது ஏற்பாடுகள் ஏதும் வழங்கியிருக்கவில்லை.

**3.3 முகாமைத்துவ திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒபாத உப அலுவலகத்தின் 1998 ஆண்டு முதல் கடமையாற்றிய காவலாளிக்கு 2010 ஜனவரி 01 திகதி முதல் உப அலுவலகத்தின் நாளாந்த வருமானம் சேகரிக்கும் கருமமும் மற்றும் நூலகத்தின் பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) சபையின் ஊழியர்கள் தொடர்பாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை குறிப்பிட்ட தினத்தில் செலுத்தப்படாமையால் ரூபா 8,499 மிகைவிதிப்பு ஒன்று செலுத்தப்பட்டிருந்தது.

(இ) சபை ஊழியர்கள் 14 பேரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 112,388 இற்கான கடன் மீதியை அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) ஒபாத உப அலுவலக கட்டிடத்தை பரிசோதனை செய்தல்

(i) தவலம பிரதேச சபைக்குச் சொந்தமான ஒபாத உப அலுவலகத்தில் 2006 ஆண்டிற்கு முன்னர் ஆயுர்வேத மருந்தகம் ஒன்று மற்றும் பொது நூலகமொன்று காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதி அளவில் இந்த உப அலுவலகம் உக்க கூடிய நிலையில் காணப்பட்டது.

(ii) இந்த கட்டிடத்தில் பொலிஸ் காவல் நிலையம் நடாத்தப்பட்ட 82 மாதங்களுக்கான வாடகை ரூபா 410,000 இனை அறவீடு செய்திருக்கவில்லை.

(iii) மின்சார பில் பத்திரம் செலுத்தப்படாமையால் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்ததுடன் மீண்டும் மின்சாரம் வழங்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையினால் பயன்படுத்தப்படும் 07 வாகனங்களின் உரிமையை உரித்தாக்கியிருக்கவில்லை.

(ஊ) சபைக்குச் சொந்தமான 53-5698 ஆம் இலக்க டபள் கப் வண்டி தொடர்பான தகவல்கள் ஏதும் சபையில் காணப்படவில்லை.

**3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

உள்ளூராட்சி ஆணையாளரின் தபபா/பபாகொ/2014/01 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக சபையில் கடமையாற்றும் இலங்கை தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் வருமான பரிசோகர் உத்தியோகத்தர் ஆகியோருக்கு பிரயாணச் செலவுகளாக ரூபா 25,633 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.5 ஒப்பந்த நிருவாகம்**

தென் மாகாண சபை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2016 மார்ச் 18 ஆம் திகதி ரூபா 100,000 இற்கான தொகையொன்று தவலம பிரதேச செயலகத்தின் கிராமிய நூலக

அபிவிருத்தி விடயங்களுக்காக சபைக்கு வழங்கியிருந்த போதிலும், சபைக்குச் சொந்தமான இரண்டு நூலகங்களிலும் அபிவிருத்தி ஏதும் செய்திருக்கவில்லை.

### 3.6 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

தவலம பிரதேச சபைக்கு திண்மக் கழிவு பொருள் முகாமைத்துவ நிலையமொன்று நிர்மாணிப்பதற்காக 2011 ஆண்டின் போது ரூபா 4,567,116 தொகை உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சினால் அங்கீகரித்திருந்ததுடன், அதனது முதலாவது தவணைப் பணமாக ரூபா 913,423 இற்காக தொகையொன்று சபைக்கு கிடைத்திருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) கட்டிடத்தினை நிர்மாணிக்க முன்னர் தேசிய கட்டிடங்கள் ஆய்வு நிறுவனத்தில் இருந்து இந்த இடம் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்வதற்கு மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து அனுமதிப் பத்திரம் ஒன்று பெற்றுக் கொள்ளாமல் நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(ii) இந்த நிர்மாண வேலைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள காணி உரித்துறுதியொன்று அல்லது தெளிவான உரிமை ஒன்று சபைக்கு சொந்தமாக காணப்படவில்லை எனினும், காவல் கூடம் ஒன்று மற்றும் செயற்திட்ட அலுவலகம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(iii) நிர்மாண வேலையின் மதிப்பீடுகளில் அடங்கியிருக்காத வேலைகளுக்காக மதிப்பீட்டு தொகையை மிகைத்து மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகள் ரூபா 902,945 தொகையாகும்.

(iv) அதேபோல அந்த நிலையம் அமைந்துள்ள காணி காடுகள் அனேகமாக வளர்ந்து காணப்பட்டதுடன், கட்டிடங்களில் கதவுகள் மற்றும் மின்சார உபகரணங்கள் என்பன நபர் ஒருவரினால் களற்றி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

(v) 2017 ஆண்டு மே மாதம் ஏற்பட்டிருந்த வெள்ள நிலைமையின் காரணமாக இந்த செயற்திட்ட அலுவலகம் அடங்கிய கட்டிடத்தின் மீது மலை ஒன்று மற்றும் மரம் ஒன்று உடைந்து விழுந்துள்ளமையால் அவை முற்றாக அழிந்துள்ளது.

(vi) சபையினால் முன் சாத்திய ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படாமல் ஜின் கங்கை இடப்பக்க ஓரத்தில் அண்மையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள திண்மக் கழிவுப் பொருள் முாகமைத்துவ நிலையம் எதுவித தேவைக்கும் பயன்படுத்த முடியாதவாறு அழிந்திருந்ததுடன் இதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,459,808 இற்கான செலவு பயனற்ற செலவு ஒன்றாக மாறியுள்ளது.

## 4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் அடங்கியுள்ள 06 செலவு விடயங்களில் ரூபா 14,212,485 தொகைக்காக சேமிப்பும், மேலும் 02 செலவு விடயங்களில் ரூபா 239,200 இற்கான முழு ஏற்பாடுகளம் சேமிக்கப்பட்டுள்ளதுடன், 05 வருமான விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 13,531,347 இற்கான நெருங்கி இருக்காத இலக்கு வருமானமும் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுபாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தபடவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இன் ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் (தென் மாகாண) இன் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதி தபபா/யஹ/01/நா.ச.லே சுற்றறிக்கையின் பிரகாரம் போதிய அளவு உள்ளக கணக்காய்வு

ஒன்று மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினைச் செயற்படுத்தல்

2009 ஜுன் 09 ஆந் திகதி DMA/2009 (i) இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்காக மீளாய்வாண்டு இறுதிவரை சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.4 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

கடந்த ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் பந்தி 2.2.2(அ) இன் கீழ் காட்டப்பட்டுள்ள பந்தியில் சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்கு இணங்கியிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை தேவையான சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| முறைமைகள் | முறைமையில் முக்கிய குறைபாடுகள் |
|---|---|
| (அ) வாகன நிருவாகம் | (i) சபைக்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (ii) செயற்படாத வாகனங்களின் பழுதுபார்த்தல் மேற்கொள்வதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (iii) வாகனங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (iv) நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ஆ) கணக்கீடு மற்றும் பதிவேடுகள் பேணுதல் | (i) சபையினால் வாகனப் பதிவேடு ஒன்று பேணியிருக்கவில்லை. |
| | (ii) சபையினால் பிரதான நாள்வழிக் குறிப்பு பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) நட்டங்கள் சேதங்கள் தொடர்பான தகவல் அடங்கிய நட்டங்கள் சேதங்கள் பதிவேடு பேணப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | | (iv) | நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | | (v) | கணினிகள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | வருமானம் சேகரித்தல் | (i) | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்காக முறையான வேலைத் திட்டமொன்று செயற்படுத்தியிருக்கவில்லை. |
| | | (ii) | முத்திரைக் கட்டணம் வருமானம் நாளது வரை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (iii) | கடை வாடகை உடன்படிக்கைகள் இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | பணியாளர் குழு முகாமைத்துவம் | (i) | பதவியணி வெற்றிடங்கள் நிரப்புவதற்காக அதே போல் மிகை பதவியணியினை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (ii) | சபையில் கடமையாற்றிய உத்தியோகத்தர் களின் நிலுவை மீதிகள் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (உ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | இரண்டு செலவு விடயங்களில் மொத்த ஏற்பாடுகளும், மேலும் 8 செலவு விடயங்களில் 09 சதவீதம் முதல் 62 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்புக்கள் காணப்பட்டன. |
| | | (ii) | 05 வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்கள் காணப்பட்டதுடன், அவை 13 சதவீதம் முதல் 79 சதவீதம் இடைப்பட்ட வீச்சில் இருந்தன. |